The inauguration ceremony was held in Srivilliputhur, where Karthik formally launched the services by cutting the ribbon and performing a traditional coconut-breaking ceremony.

In an enthusiastic gesture, the MLA then took the driver's seat and drove one of the new buses for a short distance to mark the commencement of the service.

He subsequently travelled on a new bus and interacted with school and college students to learn about their transportation facilities and travel requirements.

The new bus services are expected to benefit residents of villages around Srivilliputhur, traders, and school and college students by improving public transport connectivity.

Key functionaries and party workers of Tamilaga Vettri Kazhagam (TVK), along with members of the public, participated in the event.

Minister pulls up official over delay in estuary dredging

Mayiladuthurai, Oct 26:

A delay in clearing sand deposits at the Thirumullaivasal estuary in Mayiladuthurai district drew a sharp warning from Food and Civil Supplies Minister P. Venkataramanan on Saturday, who threatened to transfer an official if the long-pending dredging work was not taken up immediately.

The Minister issued the warning during an inspection of Thirumullaivasal fishing village near Sirkazhi, where fishermen have been struggling to take their boats into the sea due to the accumulation of sandbanks at the river mouth.

Fishermen told the Minister that the estuary had not been dredged for a long time, severely affecting boat movement and their livelihood. They urged the government to remove the accumulated sand, deepen the estuary and extend the existing breakwater to ensure safe passage for fishing vessels.

Following their complaints, Venkataramanan questioned officials about the delay in carrying out the dredging work and sought details of the proposed measures.

He then contacted the official concerned over the phone and directed him to initiate the work without further delay.

"If you are not interested in working, tell me. I will transfer you and appoint someone else," the Minister warned.

The Minister's remarks created a stir among officials present at the inspection.

He also instructed officials to arrange the necessary funds and expedite the dredging work. Assuring fishermen of government intervention, Venkataramanan said steps would be taken to find a permanent solution to the problems affecting their livelihood.

Mayiladuthurai Collector Srikanth, District Revenue Officer Poongodi and Fisheries Department officials were present during the inspection.

FORM NO. CAA 2

[Pursuant to Section 230(3) of the Companies Act, 2013 and Rule 6 and 7 of the Companies (Compromises, Arrangements and Amalgamations) Rules, 2016]

BEFORE THE NATIONAL COMPANY LAW TRIBUNAL, CHENNAI BENCH

C.A. (CAA) / 71 (CHE) / 2026

In the matter of Sections 230 to 232 read with other applicable provisions of the Companies Act, 2013

and

In the matter of Scheme of Amalgamation

of

Planetfirst Green Private Limited ("Transferor Company")

with

POCL Enterprises Limited ("Transferee Company")

And

Their Respective Shareholders and Creditors

Planetfirst Green Private Limited
CIN: U24203TN2022PTC185571
Registered Office at Willingdon Crescent, 1st Floor, No. 6/2, Pycrofts Garden Road, Nungambakkam, Shastri Bhavan, Chennai - 600006.
Email ID: accounts@planetfirstgreen.com .....**1st Applicant / Transferor Company**

POCL Enterprises Limited
CIN: L52599TN1988PLC015731
Registered Office at Willingdon Crescent, 1st Floor, No. 6/2, Pycrofts Garden Road, Nungambakkam, Chennai - 600006.
Email ID: corprelations@poel.in .....**2nd Applicant / Transferee Company**

Advertisement of Notice of the meetings of the Equity Shareholders and the Unsecured Creditors of the Transferee Company, Convened by the Honourable National Company Law Tribunal

1. Notice is hereby given that in accordance with the order dated October 13, 2026 **("Order")** in the above-mentioned joint Company Application, passed by the Hon'ble National Company Law Tribunal, Chennai Bench **("Tribunal")**, a separate meeting of the equity shareholders and the unsecured creditors of the Transferee Company is required to be convened for the purpose of considering, and if thought fit, to approve the proposed Scheme of Amalgamation between the Transferor Company and the Transferee Company and their respective shareholders and creditors **("Scheme")** under Sections 230 to 232 and other applicable provisions of the Companies Act, 2013 **("Act")** and applicable rules made thereunder.
2. In pursuance of the Order and as directed therein, and in compliance with the applicable provisions of the Act and the rules and circulars issued by the Ministry of Corporate Affairs **("MCA")** thereunder, further, notice is hereby given that the meeting of the equity shareholders and the unsecured creditors of the Transferee Company is scheduled to be held as per the following schedule **("Meeting(s)")**, at which time the said ecuity shareholders and unsecured creditors of the Transferee Company are requested to attend:

Class of Meeting	Mode of Meeting	Date of Meeting	Time
Equity Shareholders	Video Conferencing ("VC") or other audio-visual means ("OAVM") with option of attending in-person	27th November, 2026	10:30 A.M
Unsecured Creditors	Video Conferencing ("VC") or other audio-visual means ("OAVM") with option of attending in-person	27th November, 2026	12:30 P.M

In accordance with the Order of the Hon'ble Tribunal the venue of holding the video conferencing shall be the registered office of the Transferee Company situated at Willingdon Crescent, 1st Floor, No. 6/2, Pycrofts Garden Road, Nungambakkam, Chennai - 600006, Tamil Nadu, India. Further to this, steps have been taken to accommodate the Equity Shareholders, and the Unsecured Creditors, as the case may be to attend the meeting(s) at registered office of the Transferee Company if the same is requested by any such equity shareholder/unsecured creditor.

3. The notice of the Meeting along with the Scheme, explanatory statement under Section 230(3) read with Section 102 of the Act and the Companies (Compromises, Arrangements and Amalgamations) Rules, 2016, **("CAA Rules")** and other applicable provisions, if any, together with the other related documents, have been sent to the equity shareholders whose names appear in the register of members / list of beneficial Owners maintained by the Registrar to an Issue and Share Transfer Agent / Depositories as on16th October, 2026 through e-mail to all equity shareholders whose e-mail IDs are registered with the Transferee Company and for those equity shareholders whose e-mail IDs are not registered with the Transferee Company, physical letter regarding holding of the Meeting have been sent through speed post / courier containing a weblink and QR code, through which the notice, explanatory statement under Section 230(3) read with Section 102 and other applicable provisions of the Act and all annexures thereto can be accessed and to the unsecured creditors whose names appear in the books of account of the Company as at July 31, 2026 **("Creditors Cut-off Date")** being the cut-off date on which the list of such creditors was prepared and submitted with the Hon'ble Tribunal alongwith the present Company Application. Physical copies of these documents can be obtained by the equity shareholders / unsecured creditors, free of cost, by sending a request to the Transferee Company at corprelations@poel.in. The annexures to the notice are as per the information provided by the management of the Transferee Company.
4. A shareholder, whose name is recorded in the register of members / list of beneficial owners as on cut-off date, i.e., 20th November, 2026 **("Shareholders Cut-off Date")**, only shall be entitled to exercise his / her / its voting rights on the resolution proposed in the notice and attend the Meeting. A person who is not an equity shareholder as on the shareholders cut-off date, should treat this notice for information purpose only.
5. A person, whose name is recorded in the list of unsecured creditors maintained by the Transferee Company as on Creditors Cut-off Date, i.e., 31st July 2026, only shall be entitled to exercise his / her / its voting rights on the resolution proposed in the notice and attend the Meeting.
6. The Transferee Company has appointed Central Depository Services (India) Limited **("CDSL")** for providing facility and option to its equity shareholders and unsecured creditors for voting or the resolution for approval of the Scheme by casting votes by remote electronic voting **("Remote E-Voting")** and e-voting during the meeting. In case of any difficulty in e-voting or attending the Meeting through VC / OAVM, etc. please contact Mr. Rakesh Dalvi, Assistant Vice President, Central Depository Services (India) Limited, 'A' Wing, 25th Floor, Marathon Futurex, Mafatlal Mill Compounds, N M Joshi Marg, Lower Parel (East), Mumbai - 400013 or send an email to helpdesk.evoting@cdslindia.com or call at toll free no: 1800 21 09911.
7. The notice of the aforesaid Meeting and the accompanying documents of the Transferee Company are placed on the website of the Transferee Company at www.poel.in, CDSL at www.evotingindia.com, and website of the Stock Exchange. i.e., BSE Limited at www.bseindia.com.
8. Since the Meeting is being held through VC / OAVM, option of attending the Meetings through proxy is not applicable / available. However, in case any equity shareholder or unsecured creditor wishes to attend the respective meeting in-person, they can do so or appoint a proxy. Proxy forms, to be effective, must be returned so as to reach the Registered Office of the Company not less than 48 hours before the time for holding the respective Meeting. It is further clarified that body corporate / institutional member will be eligible to cast their votes through their representative duly authorised by board resolutions / power of attorney, as the case may be.
9. The equity shareholders and the unsecured creditors of the Transferee Company may cast their votes (a) through Remote e-voting during the following period:

Equity Shareholders and Unsecured Creditors of the Transferee Company	
Commencement of Remote E-Voting	Tuesday, 24th November, 2026 at 9:00 AM
End of Remote E-Voting	Thursday, 26th November, 2026 at 5:00 PM

or (b) through e-voting system of CDSL available at the respective Meetings, on Friday, 27th November, 2026, from the time of commencement of respective Meetings till 30 minutes after the conclusion of the Meeting **("E-Voting at the Meeting")**.

10. At the end of the Remote E-Voting period (as mentioned above), the Remote E-Voting module shall be disabled by CDSL for voting immediately thereafter. The equity shareholders and the unsecured creditors of the Transferee Company attending the Meeting who have not already cast their vote through Remote E-Voting shall be able to cast their vote at the Meeting. Further, instructions for attending the Meeting and e-voting are provided in the notice of the Meeting. The equity shareholders and the unsecured creditors of the Transferee Company are requested to carefully read all the notes set out in the Notice.
11. The Tribunal has appointed Mr. Sameer Kakar, to be the Chairperson of the said Meeting including for any adjournment or adjournments thereof and Mr. Mudit Jain, to be the Scrutinizer for the Meetings.
12. The above-mentioned Scheme, if approved at the Meetings, will be subject to the subsequent approval of the Tribunal and such approvals, permissions and sanctions of regulatory or other authorities as may be necessary.
13. The equity shareholders and the unsecured creditors of the Transferee Company seeking any information with regard to the Scheme or the matter proposed to be considered at the Meeting, are requested to write to the Transferee Company at least 7 (seven) days before the date of the Meeting through email at corprelations@poel.in.

For POCL Enterprises Limited
(under authorisation of Mr. Sameer Kakar,
Tribunal Appointed Chairman)

Sd/-
Aashish Kumar K Jain
Company Secretary & Finance Head

Date : 26th October 2026
Place : Chennai

சென்னை ரெயில்வே பாதுகாப்புப் படை அதிரடி நடவடிக்கை: 6 மாதத்தில் ரூ. 12.36 கோடி கடத்தல் பொருட்கள் பறிமுதல்

சென்னை, அக். 26–

சென்னை ரெயில்வே பாதுகாப்புப் படை போலீசார் கடந்த 6 மாதங்கள் நடத்திய அதிரடிய சோதனையில் ரூ. 8 கோடி கடத்தல் பொருட்கள் மற்றும் கணக்கில் வராத ஹவாலா பணம் உள்பட ரூ. 12.36 கோடி மதிப்பிலான பொருட்களை பறிமுதல் செய்துள்ளனர்.



சென்னை ரெயில்வே கோட்ட ரயில்வே பாதுகாப்புப் படையினர், 2026 ஏப்ரல் 1ஆம் தேதி முதல் செப்டம்பர் 30ஆம் தேதி வரை ஆறு மாத காலத்தில் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு குறிப்பிடத்தக்க சாதனைகளைப் படைத்துள்ளனர்.

ரூ.8.09 கோடி போதைப் பொருட்கள்

போதைப்பொருட்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்களைக் கடத்துவதைத் தடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகளில், 117 சம்பவங்களில் 50 பேர் கைது செய்யப்பட்டனர். போதைப்பொருட்கள், புகையிலைப் பொருட்கள், மதுபானங்கள் உள்ளிட்ட தடைசெய்யப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு ரூ.8.09 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. சட்டவிரோதப் போக்குவரத்தைக் கண்டறியும் நடவடிக்கைகளின் மூலம் 24 சம்பவங்களில் 31 பேர் பிடிபட்டனர். அவர்களிடமிருந்து ஹவாலா பணம், தங்கம் மற்றும் வெள்ளி உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன. இவற்றின் மொத்த மதிப்பு ரூ.4.27 கோடி. மேலும், போதைப்பொருட்கள் மற்றும் இதர கடத்தல் பொருட்கள், கணக்கில் வராத பணம், தங்கம், வெள்ளி உள்ளிட்டவற்றின் மதிப்பு ரூ.12.36 கோடி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலகட்டத்தில் 242 குழந்தைகளும் மீட்கப்பட்டுள்ளனர். பயணிகளின் உடைமைகள் திருட்டு தொடர்பான 97 வழக்குகள் கண்டறியப்பட்டு, 110 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து ரூ.19.06 லட்சம் மதிப்பிலான திருடுபோன பொருட்கள் மீட்கப்பட்டன. தொலைந்த மற்றும் திருடுபோன 16 செல்போன்கள் மீட்கப்பட்டு, அவற்றின் உரிய உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

242 குழந்தைகள் மீட்பு

ஓடும் ரயில்களில் ஏறவும் இறங்கவும் முயன்றதால் உயிருக்கு ஆபத்தான சூழலில் சிக்கிய 8 பேரை ரயில்வே பாதுகாப்புப் படையினர் துரிதமாகச் செயல்பட்டு மீட்டனர். ரயில் நிலையங்கள் மற்றும் ரயில்களில் ஆதரவின்றித் தவித்த, வீட்டை விட்டு வெளியேறிய அல்லது காணாமல் போன 242 குழந்தைகளை ரயில்வே பாதுகாப்புப் படையினர் மீட்டுள்ளனர். இவர்களில் 46 பேர் பெண் குழந்தைகள். மீட்கப்பட்ட குழந்தைகள் உரிய பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளுக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். ரெயில் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் தொடர்ந்து கண்காணிப்பு, விரைவான நடவடிக்கை மற்றும் அர்ப்பணிப்புடன் கூடிய சேவைகளை ரயில்வே பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.



எழும்பூர் தொகுதியில் அமைச்சர் ராஜ்மோகனின் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை, தமிழக வெற்றிக் கழகப் பொதுச்செயலாளரும், அமைச்சருமான என். ஆனந்த் திறந்து வைத்தார்.

விழுப்புரத்தில் வெள்ளத் தடுப்புப் பணிகள்: கலெக்டர் ஷேக் அப்துல் ஆய்வு

விழுப்புரம், அக். 26–

வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம், காந்தி நகர், இரயில் நிலையம், கீழ்பெரும்பாக்கம் மற்றும் எருமாணந்தாங்கல் உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழை வெள்ளத் தடுப்பு முன்னெச்சரிக்கை பணிகளை கலெக்டர் ஷேக் அப்துல் ரஹ்மான் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



இந்திய வானிலை ஆய்வு மையம் கனமழை எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், புதிய பேருந்து நிலைய மழைநீர் வெளியேற்றும் நிலையம், கீழ்பெரும்பாக்கம் தரைப்பாலம், இரயில் நிலையம் வழியாக செல்லும் கோலியனூர் வாய்க்கால் மற்றும் திருச்சி –சென்னை தேசிய நெடுஞ்சாலை மழைநீர் வடிகால் ஆகியவற்றை பார்வையிட்ட ஆட்சியர், அனைத்துப் பகுதிகளுக்கும் பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு பணிகள் தீவிரப் படுத்தப் பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய மக்களை தங்க வைக்க 13 பன்னோக்கு புயல் பாதுகாப்பு மையங்கள் மற்றும் 845 தற்காலிக நிவாரண முகாம்கள் என மொத்தம் 858 முகாம்கள் குடிநீர், மின்சாரம், உணவு வசதிகளுடன் தயார் நிலையில் உள்ளதாக ஆட்சியர் கூறினார். மேலும் மோட்டார்கள், மரம் அறுக்கும் இயந்திரங்கள், மோட்டார் படகுகள் தயார் நிலையில் உள்ளதாகவும், டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் தீவிரப்படுத் தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், சாலையில் மரங்கள் சாய்ந்தால் உடனடியாக அகற்றி போக்குவரத்தைச் சீர்செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இந்த ஆய்வின்போது விழுப்புரம் வருவாய் வட்டாட்சியர் யுவராஜ், நகராட்சி ஆணையர் சியாமளா உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

பெயர் மாற்றம்

OLD NAME : VEERARAGAVAN SRINIVASAN, தந்தை பெயர் : VEERARAGAVAN, Date of Birth : 26.09.1982, Residing at No.50, Selliyamman Kovil Street, Kattankolathur Post, Chengalpattu (Dt) – 603202, Shall henceforth be known as **NEW NAME : VEERARAGAVAN SRINIVASH**

OLD NAME : VEERARAGAVAN SRINIVASAN

பெயர் மாற்றம்

OLD NAME : NAJEEMA, கணவர் பெயர் : ASHRAFF BABU, Date of Birth : 15.05.1969, Residing at No.24/35, Wireless Station Road, Porur, Chennai – 600116, Shall henceforth be known as **NEW NAME : NAJMA ASHRAFF BABU**

OLD NAME : NAJEEMA

படிவம் எண். CAA.2

(நிறுவனங்கள் சட்டம் 2013–ன் 230(3) பிரிவின்படியும் மற்றும் நிறுவனங்கள் (சமரசம், சீரமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு) விதிகள் 2016–ன் விதி 6 மற்றும் 7 ஆகியவற்றின் கீழ்)

தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னை அமர்வு முன்பாக

CA (CAA) NO. 71 / (CHE) / 2026

நிறுவனங்கள் சட்டம், 2013–ன் 230 முதல் 232 வரையிலான பிரிவுகள் மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்படும் பிற பொருந்தக்கூடிய பிரிவுகளின் விஷயத்தில்

மற்றும்

பிளானட்ஃபர்ஸ்ட் கிரீன் பிரைவேட் லிமிடெட் ("மாற்றப்படும் நிறுவனம்")

உடன்

பிஓசிஎல் எண்டர்பிரைசஸ் லிமிடெட் ("மாற்றிக் கொள்ளும் நிறுவனம்")

மற்றும்

தொடர்புடைய அந்தந்த பங்குதாரர்கள் மற்றும் ஈடுபெறாத கடன் வழங்கியவர்கள் இடையே ஒருங்கிணைப்புத் திட்டம் தொடர்பான விஷயத்தில்

பிளானட்ஃபர்ஸ்ட் கிரீன் பிரைவேட் லிமிடெட்
CIN: U24203TN2022PTC185571
பதிவு அலுவலகம் : வெல்லிங்டன் கிரசண்ட், முதல் மாடி, எண்.6/2,
பைகிராப்ட்ஸ் கார்டன் ரோடு, நுங்கம்பாக்கம், சாஸ்திரி பவன், சென்னை – 600006.
மின்னஞ்சல் : accounts@planetfirstgreen.com ...1வது விண்ணப்பதாரர் / மாற்றப்படும் நிறுவனம்

பிஓசிஎல் எண்டர்பிரைசஸ் லிமிடெட்
CIN: L52599TN1988PLC015731
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : வெல்லிங்டன் கிரசண்ட், முதல் மாடி, எண்.6/2,
பைகிராப்ட்ஸ் கார்டன் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை – 600006.
மின்னஞ்சல் : corprelations@poel.in ...2வது விண்ணப்பதாரர் / மாற்றிக் கொள்ளும் நிறுவனம்

மாண்புமிகு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்தால் கூட்டப்பட்ட, மாற்றிக்கொள்ளும் நிறுவனத்தின் சம பங்குதாரர்கள் மற்றும் ஈடுபெறாத கடன் வழங்கியவர்களின் கூட்டங்களுக்கான அறிவிப்பின் விளம்பரம்

1. இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், மாண்புமிகு தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம், சென்னை அமர்வு (**"தீர்ப்பாயம்"**) மேற்கண்ட கூட்டு நிறுவன விண்ணப்பத்தில் வழங்கிய அக்டோபர் 13, 2026 தேதியிட்ட உத்தரவின்படி (**"உத்தரவு"**), நிறுவனங்கள் சட்டம் 2013–ன் (**"சட்டம்"**) 230 முதல் 232 வரையிலான பிரிவுகள் மற்றும் பொருந்தக்கூடிய பிற பிரிவுகள் மற்றும் அதன்கீழ் உருவாக்கப்பட்ட பொருந்தக்கூடிய விதிகளின் கீழ், மாற்றப்படும் நிறுவனம் மற்றும் மாற்றிக்கொள்ளும் நிறுவனம் மற்றும் தொடர்புடைய அந்தந்த பங்குதாரர்கள் மற்றும் ஈடுபெறாத கடன் வழங்கியவர்களுக்கு இடையேயான முன்மொழியப்பட்ட ஒருங்கிணைப்புத் திட்டத்தை (**"திட்டம்"**) பரிசீலிப்பதற்கும், தகுந்ததெனக் கருதினால் ஒப்புதல் அளிப்பதற்கும், மாற்றிக் கொள்ளும் நிறுவனத்தின் சமபங்குதாரர்கள் (Equity Shareholders) மற்றும் ஈடுபெறாத கடன் வழங்கியவர்களுக்கான (Unsecured Creditors) தனித்தனியான கூட்டத்தைக் கூட்ட வேண்டியுள்ளது.
2. இந்த உத்தரவின்படியும் மற்றும் அதில் அறிவுறுத்தப்பட்டவாறும், மேலும் இச்சட்டத்தின் பொருந்தக்கூடிய பிரிவுகள் மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகத்தால் (**"MCA"**) அதன்கீழ் வெளியிடப்பட்ட விதிகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்கவும், மாற்றிக்கொள்ளும் நிறுவனத்தின் சம பங்குதாரர்கள் மற்றும் ஈடுபெறாத கடன் வழங்கியவர்களுக்கான கூட்டங்கள் (**"கூட்டம் / கூட்டங்கள்"**) கீழ்க்கண்ட அட்டவணையின்படி நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளது என இதன்மூலம் மேலும் அறிவிக்கப்படுகிறது. அந்த நேரத்தில் மாற்றிக்கொள்ளும் நிறுவனத்தின் மேற்குறிப்பிட்ட சமபங்குதாரர்கள் மற்றும் ஈடுபெறாத கடன் வழங்கியவர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கூட்டத்தின் வகை	கூட்டம் நடைபெறும் முறை	கூட்டத்தின் தேதி	நேரம்
சம பங்குதாரர்கள்	நேரில் கலந்துகொள்ளும் விருப்பத்தேர்வுடன் கூடிய காணொளி காட்சி (VC) / அல்லது பிற ஒளி ஒலி காட்சி (OAVM) முறையில்	நவம்பர் 27, 2026	காலை 10.30 மணி
ஈடுபெறாத கடன் வழங்கியவர்கள்	நேரில் கலந்துகொள்ளும் விருப்பத்தேர்வுடன் கூடிய காணொளி காட்சி (VC) / அல்லது பிற ஒளி ஒலி காட்சி (OAVM) முறையில்	நவம்பர் 27, 2026	மதியம் 12.30 மணி

மாண்புமிகு தீர்ப்பாயத்தின் உத்தரவின்படி, காணொளிக் காட்சி நடைபெறும் இடமாக, வெல்லிங்டன் கிரசண்ட், முதல் மாடி, எண். 6/2, பைகிராப்ட்ஸ் கார்டன் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை – 600006, தமிழ்நாடு, இந்தியா என்ற முகவரியில் அமைந்துள்ள மாற்றிக்கொள்ளும் நிறுவனத்தின் பதிவு அலுவலகம். மேலும், ஏதேனும் சமபங்குதாரர் / ஈடுபெறாத கடன் வழங்கியவரால் கோரப்படும் பட்சத்தில், அவர்கள் மாற்றிக்கொள்ளும் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் / கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு வசதியாக, சமபங்குதாரர்கள் மற்றும் ஈடுபெறாத கடன் வழங்கியவர்களுக்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

3. சட்டத்தின் 230(3) பிரிவு மற்றும் அதனுடன் 102 பிரிவு மற்றும் நிறுவனங்கள் (சமரசம், சீரமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு) விதிகள், 2016 (**"CAA விதிகள்"**) மற்றும் பொருந்தக்கூடிய பிற பிரிவுகள் ஏதேனும் இருப்பின், அவற்றின் கீழ் திட்டத்துடனான கூட்டத்தின் அறிவிப்பு, விளக்க அறிக்கை மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள், அக்டோபர் 16, 2026 அன்றுள்ளபடி வெளியீடு மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் / வைப்பகங்களின் பதிவாளரால் (Registrar to an Issue and Share Transfer Agent / Depositories) பராமரிக்கப்படும் உறுப்பினர்களின் பதிவேடு / பயனாளி உரிமையாளர்களின் பட்டியலில் பெயர்கள் இடம்பெற்றுள்ள சமபங்குதாரர்களுக்கும், மாற்றிக்கொள்ளும் நிறுவனத்தில் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்துள்ள அனைத்து சம பங்குதாரர்களுக்கும் மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டுள்ளன. மேலும், மாற்றிக்கொள்ளும் நிறுவனத்தில் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்யாத சம பங்குதாரர்களுக்கு, கூட்டம் நடத்துவது தொடர்பான நேரடி கடிதம் (Physical Letter) விரைவு அஞ்சல் (Speed Post) / கூரியர் மூலமாக அனுப்பப்பட்டுள்ளது. இதில் ஒரு இணைய இணைப்பு (Weblink) மற்றும் QR குறியீடு உள்ளது. இதன்மூலம் கூட்ட அறிவிப்பு, சட்டத்தின் 230(3) மற்றும் 102 பிரிவுகள் மற்றும் பிற பொருந்தக்கூடிய பிரிவுகளின் கீழான விளக்க அறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களையும் அணுக முடியும். நடப்பு நிறுவன விண்ணப்பத்துடன் மாண்புமிகு தீர்ப்பாயத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட மற்றும் அத்தகைய ஈடுபெறாத கடன் வழங்கியவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்ட நாளான ஜூலை 31, 2026 அன்றுள்ளபடியான (**"கடன் வழங்கியவர்களுக்கான இறுதித் தேதி"**) நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்களில் பெயர்கள் இடம்பெற்றுள்ள ஈடுபெறாத கடன் வழங்கியவர்களுக்கும் இவை அனுப்பப்பட்டுள்ளன. சம பங்குதாரர்கள் / ஈடுபெறாத கடன் வழங்கியவர்கள் corprelations@poel.in என்ற மின்னஞ்சல் முகவரியில் மாற்றிக்கொள்ளும் நிறுவனத்திற்கு கோரிக்கை அனுப்புவதன் மூலம் இந்த ஆவணங்களின் அச்சு நகல்களை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். அறிவிப்புக்கான இணைப்புகள் மாற்றிக்கொள்ளும் நிறுவனத்தின் நிர்வாகத்தால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அமைந்தவையாகும்.
4. இறுதித் தேதியான நவம்பர் 20, 2026 அன்றுள்ளபடி (**"பங்குதாரர்களுக்கான இறுதித் தேதி"**), உறுப்பினர்களின் பதிவேடு / பயனாளி உரிமையாளர்களின் பட்டியலில் பெயர் இடம்பெற்றுள்ள பங்குதாரர் மட்டுமே, அறிவிப்பில் முன்மொழியப்பட்டுள்ள தீர்மானத்தின் மீது தனது வாக்குரிமையைப் பயன்படுத்தவும், கூட்டத்தில் கலந்து கொள்ளவும் தகுதியுடையவர் ஆவார். பங்குதாரர்களுக்கான இறுதித் தேதியன்று சம பங்குதாரராக இல்லாத ஒரு நபர், இந்த அறிவிப்பைத் தகவலுக்காக மட்டுமே என கருத வேண்டும்.
5. ஈடுபெறாத கடன் வழங்கியவர்களுக்கான இறுதித் தேதியான ஜூலை 31, 2026 அன்றுள்ளபடி, மாற்றிக்கொள்ளும் நிறுவனத்தால் பராமரிக்கப்படும் ஈடுபெறாத கடன் வழங்கியவர்களின் பட்டியலில் பெயர் இடம்பெற்றுள்ள நபர் மட்டுமே, அறிவிப்பில் முன்மொழியப்பட்டுள்ள தீர்மானத்தின் மீது தனது வாக்குரிமையைப் பயன்படுத்தவும், கூட்டத்தில் கலந்து கொள்ளவும் தகுதியுடையவர் ஆவார்.
6. திட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பதற்கான தீர்மானத்தின் மீது, மாற்றிக் கொள்ளும் நிறுவனத்தின் சம பங்குதாரர்கள் மற்றும் ஈடுபெறாத கடன் வழங்கியவர்கள் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு (**"தொலைதூர மின்–வாக்குப்பதிவு / "Remote E-Voting"**) மற்றும் கூட்டத்தின் போது மின்–வாக்குப்பதிவு (e-voting) மூலம் தங்களது வாக்குகளைப் பதிவு செய்யும் வசதியையும் விருப்பத் தேர்வையும் வழங்குவதற்காக, சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (**"CDSL"**) நிறுவனத்தை மாற்றிக்கொள்ளும் நிறுவனம் நியமித்துள்ளது. மின்–வாக்குப்பதிவு செய்வதில் அல்லது காணொளி காட்சி (VC) / பிற ஒளி–ஒலி காட்சி முறைகள் (OAVM) போன்றவற்றின் மூலம் கூட்டத்தில் கலந்து கொள்வதில் ஏதேனும் சிரமம் இருந்தால், தயவுசெய்து திரு. ராகேஷ் தல்வி, உதவி துணைத் தலைவர், சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட், 'ஏ' விங், 25வது தளம், மராத்தான் ஃபியூச்சர்க்ஸ், மஃபத்லால் மில் காம்பவுண்ட்ஸ், எம்என் ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை – 400013 என்பவரைத் தொடர்பு கொள்ளவும் அல்லது helpdesk.evoting@cdslindia.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும் அல்லது 1800 21 09911 என்ற கட்டணமில்லாத் தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.
7. மேற்கண்ட கூட்டத்தின் அறிவிப்பு மற்றும் மாற்றிக்கொள்ளும் நிறுவனத்தின் அதனுடனான இணைக்கப்பட்ட ஆவணங்கள் மாற்றிக்கொள்ளும் நிறுவனத்தின் இணையதளமான www.poel.in, சிடிஎஸ்எல்–ன் (CDSL) இணையதளமான www.evotingindia.com மற்றும் பங்குச் சந்தையான பிஎஸ்இ லிமிடெட்டின் இணையதளமான www.bseindia.com ஆகியவற்றில் கிடைக்கப் பெறுகின்றன.
8. கூட்டம் காணொளி காட்சி (VC) / பிற ஒளி–ஒலி காட்சி முறைகள் (OAVM) மூலம் நடைபெறுவதால், கூட்டங்களில் பதிலி (proxy) மூலம் கலந்துகொள்ளும் விருப்பத்தேர்வு பொருந்தாது / கிடைக்காது. இருப்பினும், ஏதேனும் சம பங்குதாரர் அல்லது ஈடுபெறாத கடன் வழங்கியவர் சம்பந்தப்பட்ட கூட்டத்தில் நேரில் கலந்து கொள்ள விரும்பினால், அவர்கள் அவ்வாறு செய்யலாம் அல்லது ஒரு பதிலியை (proxy) நியமிக்கலாம். பதிலி படிவங்கள் செல்லுபடியாக, சம்பந்தப்பட்ட கூட்டத்தை நடத்துவதற்கான நேரத்திற்கு 48 மணி நேரத்திற்கு முன்னதாகவே நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தை வந்தடையும் வகையில் திருப்பி அனுப்பப்பட வேண்டும். பெருநிறுவன / நிறுவன உறுப்பினர்கள் (body corporate / institutional member) தங்களின் இயக்குநர் குழுத் தீர்மானங்கள் / அதிகாரப் பத்திரம் (power of attorney) மூலம் முறையாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் வாயிலாகத் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யத் தகுதியுடையவர்கள் ஆவர் என்பது மேலும் தெளிவுபடுத்தப்படுகிறது.
9. மாற்றிக்கொள்ளும் நிறுவனத்தின் சம பங்குதாரர்கள் மற்றும் ஈடுபெறாத கடன் வழங்கியவர்கள் தங்கள் வாக்குகளை (அ) கீழ்க்கண்ட காலத்தில் தொலைதூர மின்–வாக்குப்பதிவு (Remote e-voting) மூலமாகப் பதிவு செய்யலாம்.

மாற்றிக்கொள்ளும் நிறுவனத்தின் சம பங்குதாரர்கள் மற்றும் ஈடுபெறாத கடன் வழங்கியவர்கள்	
தொலைதூர மின்–வாக்குப்பதிவு துவக்கம்	செவ்வாய்க்கிழமை, நவம்பர் 24, 2026 காலை 9.00 மணி
தொலைதூர மின்–வாக்குப்பதிவு முடிவு	வியாழக்கிழமை, நவம்பர் 26, 2026 மாலை 5.00 மணி

அல்லது (ஆ) நவம்பர் 27, 2026 வெள்ளிக்கிழமையன்று சம்பந்தப்பட்ட கூட்டங்கள் தொடங்கும் நேரத்திலிருந்து கூட்டம் முடிவடைந்து 30 நிமிடங்கள் வரை சம்பந்தப்பட்ட கூட்டங்களில் கிடைக்கும் CDSL–ன் மின்–வாக்குப்பதிவு முறையின் மூலமாகப் பதிவு செய்யலாம் (**"கூட்டத்தில் மின்–வாக்குப்பதிவு"**).


10. தொலைதூர மின்–வாக்குப்பதிவுக் காலத்தின் முடிவில் (மேலே குறிப்பிட்டுள்ளபடி), அதன்பிறகு உடனடியாக வாக்களிப்பதற்கான தொலைதூர மின்–வாக்குப்பதிவுத் தொகுதியை CDSL முடக்கிவிடும். தொலைதூர மின்–வாக்குப்பதிவு மூலம் ஏற்கனவே தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளும் மாற்றிக் கொள்ளும் நிறுவனத்தின் சம பங்குதாரர்கள் மற்றும் ஈடுபெறாத கடன் வழங்கியவர்கள் கூட்டத்தில் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்ய முடியும். மேலும், கூட்டத்தில் கலந்து கொள்வதற்கும் மற்றும் மின்–வாக்குப்பதிவு செய்வதற்குமான அறிவுறுத்தல்கள் கூட்டத்தின் அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன. மாற்றிக் கொள்ளும் நிறுவனத்தின் சம பங்குதாரர்கள் மற்றும் ஈடுபெறாத கடன் வழங்கியவர்கள் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து குறிப்புகளையும் கவனமாகப் படிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
11. மேற்குறிப்பிட்ட கூட்டத்திற்கும், அதன் ஒத்திவைப்பு அல்லது ஒத்திவைப்புகளுக்கும் தலைவராக திரு.சமீர் காகர் அவர்களையும் மற்றும் கூட்டங்களுக்கான ஆய்வாளராக (Scrutinizer) திரு. முதித் ஜெயின் அவர்களையும் தீர்ப்பாயம் நியமித்துள்ளது.
12. மேலே குறிப்பிடப்பட்ட திட்டம், கூட்டங்களில் அங்கீகரிக்கப்பட்டால், தீர்ப்பாயத்தின் அடுத்தகட்ட ஒப்புதலுக்கும் மற்றும் அவசியமாக இருக்கக்கூடிய ஒழுங்குமுறை அல்லது பிற அதிகார அமைப்புகளின் அத்தகைய ஒப்புதல்கள், அனுமதிகள் மற்றும் அதிகாரப்பூர்வ ஏற்புகளுக்கும் (sanctions) உட்பட்டதாக இருக்கும்.
13. திட்டம் அல்லது கூட்டத்தில் பரிசீலிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள விஷயம் தொடர்பாக ஏதேனும் தகவலைப் பெற விரும்பும் மாற்றிக்கொள்ளும் நிறுவனத்தின் சம பங்குதாரர்கள் மற்றும் ஈடுபெறாத கடன் வழங்கியவர்கள், கூட்டத் தேதிக்கு குறைந்தபட்சம் 7 (ஏழு) நாட்களுக்கு முன்னதாக corprelations@poel.in என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் மாற்றிக்கொள்ளும் நிறுவனத்திற்கு எழுதுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பிஓசிஎல் எண்டர்பிரைசஸ் லிமிடெட்டுக்காக
(திரு. சமீர் காகர் தீர்ப்பாயத்தால் நியமிக்கப்பட்ட தலைவர் அவர்களின் அதிகாரத்தின் கீழ், கூட்டத்திற்காக தீர்ப்பாயத்தால் நியமிக்கப்பட்ட தலைவர்)

நாள் : அக்டோபர் 26, 2026
இடம் : சென்னை

ஒப்பம்/–
ஆஷிஸ் குமார் K ஜெயின்
கம்பெனி செயலாளர் மற்றும் நிதித் தலைவர்

காணவில்லை



I. நிலோபர் நிஷா
(வயது – 58)

விலாசம்: எண். 204, சூளைமேடு சந்து, சூளைமேடு, சென்னை – 600 094.

மேலே படத்தில் உள்ள எனது அக்கா திருமதி. நிலோபர் நிஷா, வயது 58, சிறிது மனநிலை சரி இல்லாத காரணத்தினால் 03–02–2017 அன்று எங்கோ சென்று விட்டார். எங்குதேடியும் கிடைக்கவில்லை. யாரேனும் மேற்படி எனது அக்காவை கண்டுபிடித்தால் கீழ்கண்ட எனது விலாசத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

I. மதுபாலா

கதவு எண். 74, 3வது தளம் 'எ' பிளாக், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சுபேதார் தோட்டம், சூளைமேடு ஹைரோடு, சூளைமேடு, சென்னை – 600 094, (கிரேடர் பியரல் அடுக்குமாடி அடுத்து)

போன்: 9710452540, 6381769456

மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: சாதனா ஹவுஸ், 2வது தளம், 570,P.B.மார்க். வொர்லி, மும்பை-400018. Tel: +9122 66523500 Fax: +9122 24972741
Email id: customercare.mrhfl@mahfin.com, Website – www.mahindrahomefinance.com
பிராந்திய அலுவலகம்: **ஈஸ்ட்- வெஸ்ட் சென்டர், முதல் தளம், எண்.128 (பழைய எண்.35) நெல்சன் மாணிக்கம் ரோடு, அமிஞ்சிக்கரை, சென்னை-600 029**

கோரிக்கை அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(2) மற்றும் அதற்கு தொடர்புடைய 2002ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 3(1)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு. மேற்படி சட்டத்தின் கீழ், கீழே கையொப்பமிட்டுள்ளவர்கள் மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்-ன் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறார்கள். மேற்படி சட்டம் பிரிவு 13(12) மற்றும் அதற்கு தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி அதிகாரப்பூர்வ அலுவலர் மேற்படி சட்டம் பிரிவு 13(2)-ன் கீழ் பின்வரும் கடன்தாரர்களுக்கு (குறிப்பிடப்பட்ட கடன்தாரர்கள்)/சக-கடன்தாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்புகளை (Demand Notices) அனுப்பி அந்தந்த அறிவிப்புகளில் காணும் தொகையை செலுத்துமாறு கோரினார். அதன் விவரம் இங்கே மீண்டும் தரப்பட்டுள்ளது.

வ.எண்.1: கடன் கணக்கு எண்.**XRESTVR00683977; கடன்தாரர்: 1.செல்லம்மாள் V, சக-கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள்: 2.கோபி, இருவரது முகவரி:** எண்.2/70B, பெருமாள் கோயில் தெரு, கண்ணன்கோட்டை, பெருமாள் கோயில் அருகில், திருவள்ளூர்-601 202, **3.சசிகுமார் A**, B/289, மூனவீதி, மேலூர், பெருமாள் கோயில் அருகில், திருவள்ளூர்-601 202; கோரிக்கை அறிவிப்பு தேதி: **20.10.2026**; கோரப்பட்ட தொகை: **20.10.2026** அன்றுள்ளபடி **₹3,97,419.07; கிளை: பெரியபாளையம்**
ஈடுபெற்ற சொத்து: வடசென்னை பதிவு மாவட்டம், கும்மிடிபூண்டி சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.35/4, **மனை எண்.32, கண்ணன்கோட்டை கிராமம், கும்மிடிபூண்டி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம்** என்னும் முகவரியில் உள்ள **100 சதுர மீட்டர் நிலம்** அதனுடன் அனைத்து வழிப்பாதை உரிமைகள், உதிரி பாகங்கள் மற்றும் அனைத்து வழிப்பாதை மற்றும் அனுபந்த உரிமைகள் உட்பட. எல்லைகள்: வடக்கு: ரோடு, தெற்கு: மனை எண்.39, கிழக்கு: மனை எண்.33, மேற்கு: மனை எண்.31.

வ.எண்.2: கடன் கணக்கு எண்.**XRESPEY00981553; கடன்தாரர்: 1.சுகுணா, சக-கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள்: 2.சுரேஷ், இருவரது முகவரி:** எண்.279, பஜனை கோயில் தெரு, பெட்டைமேடு கிராமம், வடமதுரை, திருவள்ளூர்-601 102, **3.ரமேஷ்**, எண்.385, அண்ணா நகர், பெட்டைமேடு, வடமதுரை-601 102; கோரிக்கை அறிவிப்பு தேதி: **20.10.2026**; கோரப்பட்ட தொகை: **20.10.2026** அன்றுள்ளபடி **₹6,45,431.43; கிளை: பெரியபாளையம்**
ஈடுபெற்ற சொத்து: வடசென்னை பதிவு மாவட்டம், ஆரணி சார் பதிவாளர் எல்லைக்குட்பட்ட, **வடமதுரை கிராமத்தில்** பழைய சர்வே எண்.298/1, புதிய சர்வே எண்.1644/15-ல் உள்ள **818 சதுர அடி மனை.** எல்லைகள்: வடக்கு: தெரு, கிழக்கு: காலி நிலம், மேற்கு: Mr.பெருமாள் வீடு, தெற்கு: Mr.நாகு வீடு.

வ.எண்.3: கடன் கணக்கு எண்.**XRESPEY01047793; கடன்தாரர்: 1.இயேசு, சக-கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள்: 2.சந்தோஷ்,** 3.கெங்கன், **அனைவரது முகவரி:** எண்.608, அரிஜனா காலனி, ஆத்துப்பாக்கம், திருவள்ளூர்-601 102; கோரிக்கை அறிவிப்பு தேதி: **20.10.2026**; கோரப்பட்ட தொகை: **20.10.2026** அன்றுள்ளபடி **₹2,35,594.95; கிளை: பெரியபாளையம்**
ஈடுபெற்ற சொத்து: வடசென்னை பதிவு மாவட்டம், கும்மிடிபூண்டி சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, **ஆத்துப்பாக்கம் கிராமத்தில்** பழைய சர்வே எண்.141/2, புதிய சர்வே எண்.141/16-ல் உள்ள **1582 சதுர அடி மனை.** எல்லைகள்: வடக்கு: ராஜி வீடு, கிழக்கு: சந்தோஷ் வீடு, மேற்கு: ஏழுமலை வீடு, தெற்கு: ரோடு

வ.எண்.4: கடன் கணக்கு எண்.**XRESPEY00994179; கடன்தாரர்: 1.விஜயா, சக-கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்: 2.சத்தியா, 3.விநாயகம், அனைவரது முகவரி:** எண்.56, AD காலனி, மேல் காலனி, மேல்முதலம்பேடு கிராமம், கும்மிடிபூண்டி-601 102; கோரிக்கை அறிவிப்பு தேதி: **20.10.2026**; கோரப்பட்ட தொகை: **20.10.2026** அன்றுள்ளபடி **₹2,43,604.58; கிளை: பெரியபாளையம்**
ஈடுபெற்ற சொத்து: வடசென்னை பதிவு மாவட்டம், ஆரணி சார் பதிவாளர் எல்லைக்குட்பட்ட, **முதலம்பேடு கிராமத்தில்** பழைய சர்வே எண்.428/1B2, புதிய சர்வே எண்.428/51-ல் உள்ள **871 சதுர அடி மனை.** ஏல்லைகள்: வடக்கு: கணேஷ் வீடு, கிழக்கு: கார்த்தி வீடு, மேற்கு: செல்வி வீடு, தெற்கு: ரோடு.

மேற்படி நடவடிக்கையைத் தொடர்ந்து, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொகையையும் அது முழுமையாக செலுத்தப்படும் தேதி வரை / வசூலிக்கப்படும் தேதி வரை உள்ள 24% p.a. (கடனின் காலத்திற்கு ஏற்றாற்போல் மாறுபடும்) வட்டியைச் சேர்த்து மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்-க்கு செலுத்துமாறு மீண்டும் மேற்படி கடன்தாரர்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
எனவே, மேற்குறித்தவாறு தொகையையும், வட்டியையும் கடன்தாரர்கள் இக்கம்பெனியிடம் செலுத்துமாறு இதன் மூலம் கடன்தாரர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. தவறினால் மேற்படி சட்டம் பிரிவு 13(4)-ன் கீழ் மேற்காணும் கடனீட்டுச் சொத்துகள் மீது மேற்படி கடன்தாரர்களின் சொந்த கஷ்ட நஷ்டத்திலும் விளைவுகளிலும் கம்பெனி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

தேதி: **26.10.2026** **Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்**

பெயர் மாற்றம்

I, OLD GIVEN NAME : MUKESH JAIN, OLD SUR NAME : MADANLAL JAIN, S/O.MADANLAL JAIN, Date of Birth : 30.08.1968, Residing at No.29/16, Prince Ratnapuri Garden Residency, A–701, Kondithope, Chennai, Tamil Nadu – 01, Shall henceforth be known as **NEW GIVEN NAME : MUKESH, NEW SUR NAME : MADANLAL JAIN ONLY**

OLD GIVEN NAME : MUKESH JAIN
OLD SUR NAME : MADANLAL JAIN

பொது அறிவிப்பு

வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டாண்மை சட்டம் (LLP)ன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றுவது குறித்து செய்தித்தாள் விளம்பரம் வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டாண்மை சட்டம் 2008ன் பிரிவு 13 மற்றும் அதனுடன் இணைந்த வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டாண்மை விதிகள், 2009ன் விதி 17 ஆகியவற்றின் அடிப்படையில் SAURABH & SHIVETA LLP (முன்னர் Unetra Global Network LLP என்று அழைக்கப்பட்டது; LLP அடையாள எண் ACE 8146)இதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :Flat No. H2303, 23rd floor, Tower H, SPR City, No.1 Cooks Road, Perambur,Chennai – 600012. Tamil Nadu பொதுமக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டாண்மைச் சட்டம்,2008ன் பிரிவு 13(3) மற்றும் வரையறுக்கப்பட்டபொறுப்பு கூட்டாண்மை விதிகள், 2009-ன் விதி 17 ஆகியவற்றின் படியும்,23 அக்டோபர் 2026அன்று நடைபெற்ற கூட்டத்தில் அனைத்து கூட்டாளிகளின் சம்மதத்துடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படியும் இந்த LLP தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை தமிழ்நாட்டில் இருந்து கர்நாடக மாநிலத்திற்கு மாற்ற உத்தேசித்துள்ளது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடு முடிந்ததும்,இதுதொடர்பாக உரிய படிவம் 15ஐ (Form 15)பதிவாளரிடம் (Registrar) தாக்கல் செய்யத் திட்டமிட்டுள்ளது. இந்த அலுவலக மாற்றத்தினால் யாருடைய நலன்களாவது பாதிக்கப்படக்கூடும் என்று கருதினால், அவர்கள் தங்கள் ஆட்சேபனைகளை ஒரு உறுதிமொழிப் பத்திரத்துடன் (Affidavit) சமர்ப்பிக்கலாம். அதில், தங்களுக்குள்ள நலன் என்ன என்பதையும், ஆட்சேபனைக்கான காரணங்களையும் குறிப்பிட வேண்டும். இத்தகைய ஆட்சேபனைகளை, இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து இருபத்தி ஒரு(21) நாட்களுக்குள், பின்வரும் முகவரியில் உள்ள நிறுவனங்களின் பதிவாளர் (Registrar of Companies)அலுவலகத்திற்கு நேரில் வழங்கலாம் அல்லது பதிவு அஞ்சல் (Registered Post) மூலம் அனுப்பலாம் : Block No.6 Wing, 2nd Floor, Shastri Bhawan, 26, Haddows Road, Chennai – 600034, Tamilnadu. அதே சமயம், இது குறித்த நகல் ஒன்றை, மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள சம்பந்தப்பட்ட LLP நிறுவனத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

SAURABH & SHIVETA LLP (முன்னர் **Unetra Global Network LLP**) சார்பாகவும், அதன் பெயரிலும்ஒப்பம் சௌரப் கார்க் (Saurabh Garg) நியமிக்கப்பட்ட பங்குதாரர்
Designated Partner
(DIN: 01461055)
Date :26th October 2026
Place : Chennai

மாண்புமிகு சார்ந்து நீதிமன்றம்
திருவொற்றியூர்
O.S.No. 18 OF 2026

M/s. OM SHANTI INDUSTRIES PRIVATE LIMITED
Represented by its Director
Chintan K Jain
Having their Principal place of Business at: G2 Survey No.162/1, Andarkuppam Road, Theeyambakkam,
Chennai – 600 060. ...Plaintiff
Vs
1. M/S. J.K. INDUSTRIES
Rep by its Proprietor
KUMAR JAGADEESH and another ...Defendant

TO,
1. M/S. J.K. INDUSTRIES
Rep by its Proprietor
KUMAR JAGADEESH
Principal place of business at:
New no. 3/254, Old no. 3/231,
THANDALAM ROAD, KOVOOR, Chennai,
Tamil Nadu – 600 128.
2. KUMAR JAGADEESH
Proprietor of M/S. J.K. INDUSTRIES
Principal place of business at:
New no. 3/254, Old no. 3/231,
THANDALAM ROAD, KOVOOR, Chennai,
Tamil Nadu 600128.

மனுதாரர் மேற்கண்ட வழக்கை OS.18 Of 2026 ன் கீழ் திருவொற்றியூர் மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கு திருவொற்றியூர் மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் 23.09.2026 அன்று விசாரணைக்கு வந்தது. எனவே, நீங்கள் 02.11.2026 அன்று நேரில் அல்லது ஒரு வழக்கறிஞர் மூலம் ஆஜராகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு நீங்கள் ஆஜராகத் தவறினால், மேற்கண்ட வழக்கு உங்கள் தரப்பினர் ஆஜராகாத நிலையில் ஒருதலைப்பட்சமாகத் தீர்மானிக்கப்படும் என்பதை இதனாலும் உங்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

D.விஜயகிருஷ்ணா,
வழக்கறிஞர்.

பெயர் மாற்றம்

OLD NAME : SYED AFROZ, S/O.SYED GHOUSE BASHA, Date of Birth : 24.09.1971, Residing at 15/3, New Natarajapuram, Ayyavoo Naidu Colony, Amijikarai, Chennai – 600029, Shall henceforth be known as **NEW NAME : SYED AFROZ SYED GHOUSE BASHA**

OLD NAME : SYED AFROZ

பெயர் மாற்றம்

OLD NAME : SATISH KUMAR E, S/O.EMROSE, Date of Birth : 20.01.1974, Residing at Block – A1, Flat – A3, 3rd Floor, Nolambur Main Road, Mugappair West, Mugappair, Chennai – 600037, Shall henceforth be known as **NEW NAME : SATHISH KUMAR E**

OLD NAME : SATISH KUMAR E

பெயர் மாற்றம்

OLD NAME : BALASUBRAMANI R, S/O.RAMADASS, Date of Birth : 07.03.1994, பிறந்த ஊர் : Chennai, Residing at No.4, Sengannai Amman Koil Street, 1st Cross Street, Ganapathipuram, Tambaram East, Chennai – 600059, Shall henceforth be known as **NEW NAME : BALASUBRAMANIAM R.**

OLD NAME : BALASUBRAMANI R

பெயர் மாற்றம்

OLD SUR NAME : VENKATANARASHIMHAN, OLD GIVEN NAME : VAISHALI, கணவர் பெயர் : VENKATANARASHIMHAN RAMAKRISHNAN, Date of Birth : 06.03.1991, Residing at 5–B, Ramaniyam Parampara, 5, Baktavachalam Salai, Mylapore, Chennai – 600004, Shall henceforth be known as **NEW SUR NAME : SUBRAMANIAN, NEW GIVEN NAME : VAISHALI**

OLD SUR NAME : VENKATANARASHIMHAN
OLD GIVEN NAME : VAISHALI

பெயர் மாற்றம்

OLD SUR NAME : MANOHARAN, OLD GIVEN NAME : KAVITHA, கணவர் பெயர் : MANOHARAN, Date of Birth : 22.03.1968, பிறந்த ஊர் : Vaniyampadi, Tamilnadu, Residing at No.52/1, Majestic flat, south Jaganathan Nagar, 2nd Main Road, Villivakkam, Chennai – 600049, Shall henceforth be known as **NEW SUR NAME : SANDULUR, NEW GIVEN NAME : KAVITHA**

OLD SUR NAME : MANOHARAN
OLD GIVEN NAME : KAVITHA

பெயர் மாற்றம்

OLD NAME : ROHINI MANIVANNAN (MAIDEN NAME) கணவர் பெயர் : BALAJI,Date of Birth : 07.05.1989, Residing at No.31/B2, Buddhar Street, Srinivasa Nagar Post, New Perungalathur, Chennai – 600063, Tamil Nadu, India, Shall henceforth be known as **NEW GIVEN NAME : ROHINI, NEW SUR NAME : BALAJI (MARRIED NAME)**

OLD NAME : ROHINI MANIVANNAN (MAIDEN NAME)

பெயர் மாற்றம்

OLD NAME : SAVAN SHIDRAM JAISHATTE, தந்தை பெயர் : SHIDRAM DIGAMBER JAISHATTE, Date of Birth : 19.08.1997, Residing at No.7, Labour colony Main Road, Pallikaranai, Tambaram – 600100, Shall henceforth be known as **NEW GIVEN NAME : SAVAN, NEW SUR NAME : SHIDRAM**

OLD NAME : SAVAN SHIDRAM JAISHATTE

மாட்சிமிகு மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், விக்கிரவாண்டி
I.A. 467/2026 and I.A. 467/2026
in
O.S. 427/2024

முனுசாமி, த/பெ தர்மலிங்கம்,
சென்னகுணம் கிராமம்
கண்டாச்சிபுரம் வட்டம்
மனுதாரர்/வாதி
எதிர்
1. அபிதா க/பெ நபிஹான்,
நெ: 169/226, எல்.என். புரம்,
பண்ருட்டி (R9)
2. ராஜேஸ்வரி க/பெ பழனி, நெ: 5,
பி.எஸ்.பி நகர், பண்ருட்டி (R10)
3.சங்கர்ராமன் த/பெ சுப்பிரமணியன்,
உஷா நகர், புழுதிவாக்கம், சென்னை,
காஞ்சிபுரம் மாவட்டம், (R12)
4. ரங்கநாயகி க/பெ மணி அய்யர்,
நெ: 1/539, 5வது தெரு, இந்திரபுரி,
சுன்னாம்பு கொளத்தூர்,
சென்னை–117 (R17)
5. சிவகாமி க/பெ மாரி நெ:
1/529, 5வது தெரு, இந்திரபுரி,
கோவிலம்பாக்கம்,
சென்னை–117 (R18)
9,10,12,17,18 எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

இந்த நெம்பரில் மனுதாரர் மற்றும் வாதி தங்கள் பேரிலும் இதர நபர்கள் பேரிலும் தாவா சொத்துக்களை பொறுத்து விளம்புகை மற்றும் ஒப்புதல் பரிகாரத்திற்கு வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருக்கும்போது 3ம் பிரதிவாதி கோவிந்தன் இறந்து விட்டதால் அவருக்கு வாரிசு மனுவும், காலதாமத மனுவும் தாக்கல் செய்து அதில் தங்கள் தரப்பு ஆட்சேபணை தாக்கல் செய்ய வருகிற 16.11.2026 அன்று வாய்தா வைக்கப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் சமூகம் நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ காலை 10 மணிக்கு ஆஜராகி தங்கள் தரப்பு ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டியது, தவறும் பட்சத்தில் வாதி தங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவினை பெற்றிட நேரிடும் என்பதை இதன் மூலம் தங்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

S.சுந்தரேசன் B.Com., B.L.,
R.சுஜாதா கலைச்செல்வி M.Sc., B.L.,
வழக்கறிஞர்கள், திருக்கோவிலூர்

மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றம், தர்மபுரி
H.M.O.P. No: 101/2026
IN
I.A.No. 02/2026

மாதேஸ்வரி,
கணவர் பெயர்: வெற்றிவேல்.
... மனுதாரர்
–எதிராக–
வெற்றிவேல், தந்தை பெயர்: கலியசாமி
...எதிர்மனுதாரர்

அறிவிப்பு அனுப்பப்படுபவர்:
வெற்றிவேல், த/பெ கலியசாமி, வயது சுமார் 46, கதவு எண்: 1/47, கன்னி கோவில் தெரு, மேலபுளியம்பட்டி, எய்யலூர் கிராமம், காட்டுமன்னார்கோவில் வட்டம், கடலூர் மாவட்டம்–608304.
(அலைபேசி எண்: 79070 13014)

மேற்கண்ட HMOP. No: 101/2026 In IA.NO:02/2026 வழக்கானது தர்மபுரி மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றத்தில் தங்கள் மீது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கிற்கான சம்மன் தங்களின் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட்டு, தபால் நிலையத்தினால் கடந்த 27.05.2026 அன்று திரும்பப் பெறப்பட்டது. எனவே, மனுதாரருக்கு தங்களின் தற்போதைய முகவரி விவரம் தெரியாத காரணத்தால், சிவில் நடைமுறைச் சட்டம் (CPC) ஆர்டர் 5 ரூல் 20–ன் படி பத்திரிகை அறிவிப்பு மூலம் சம்மன் அனுப்ப நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதன்படி, தாங்கள் வருகின்ற 10.11.2026 அன்று காலை 10.00 மணிக்கு தர்மபுரி மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றத்தில் நேரில் அல்லது வழக்கறிஞர் மூலமாக ஆஜராகி, மனுவின் நகல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப் படுகிறீர்கள். தவறினால், வழக்கு தங்களின் ஆஜரின்றி சட்டப்படி தீர்மானிக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

மாதேஸ்வரி
மனுதாரர்

100 ஆண்டு விழா 25

“கவிஞர்கள் கற்க வேண்டிய கண்ணதாசனின் கவிநயம்!!”



அண்ணாதுரை கண்ணதாசன்

கண்ணதாசனுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று நாங்கள் யாரையும் தேடிச் சென்றதில்லை. யாரிடமும், “கண்ணதாசனுக்கு இதைச் செய்யுங்கள்” என்று கேட்டதும் இல்லை.

அந்த அளவுக்கு எங்கள் அப்பா தன்னுடைய இடத்தை இந்த உலகத்தில் விட்டுச் சென்றிருக்கிறார்.


ஒரு அரசு, கண்ணதாசனுக்குச் செய்ய வேண்டிய மரியாதையைச் செய்ய முன்வரும்போது, அதில் நாங்கள் தலையிடுவது தவறு என்று நான் நினைக்கிறேன்.

என்னைப் பொறுத்தவரை, கண்ணதாசனுக்குச் சிலை வைப்பதில் எனக்கு பெரிய விருப்பம் இல்லை. சிலை வைப்பது என்பது தலைவர்களுக்கு நாம் செலுத்தும் மரியாதை.

ஒரு கவிஞருக்கு சிலை வைப்பதை விட, அவர் எழுதியவற்றை மக்கள் படிப்பதற்கான படிப்பகம் அமைப்பதும், அவருடைய படைப்புகளைப் பாதுகாக்கும் நினைவகம் அமைப்பதும்தான் சிறந்த மரியாதை என்று நான் நினைக்கிறேன்.

ஆனால், எம்எஸ்வி அவர்களுக்கு கண்ணதாசனுக்குச் சிலை வைக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. அந்த விருப்பத்தின் அடிப்படையில் சிலை வைக்கப்பட்டது. இப்போது அந்தச் சிலையை எங்கள் அண்ணன் பராமரித்து வருகிறார்.

கண்ணதாசனுக்கு நாம் விளம்பரம் தேடித் தர வேண்டிய நிலை இல்லை என்பதற்கு உலகம் முழுவதும் நடைபெறும் நிகழ்ச்சிகளே சாட்சி.



மலேசியாவில் கண்ணதாசனுக்காக ஒரு வருடம் முழுவதும் விழா நடத்தப்படுகிறது. ஏற்கெனவே நான்கு மாகாணங்களில் அந்த விழாக்கள் தொடங்கிவிட்டன. இந்தியாவில் மட்டுமல்ல; உலகம் முழுவதும் கண்ணதாசனை மக்கள் கொண்டாடிக்கொண்டிருக்கிறார்கள்.

கண்ணதாசன் காட்டிய கவிதை வழி!

அப்பாவின் எழுத்தின் மிகப்பெரிய சிறப்பு என்னவென்றால், மக்களுக்கு என்ன தேவை என்பதை அவர் புரிந்துகொண்டிருந்தார்.

இலக்கியத்தை வெறும் இலக்கியமாக எழுதிக்கொண்டிருந்தால் மட்டும் மக்கள் அதை ரசிப்பார்கள் என்று அவர் நினைக்கவில்லை. தூய தமிழில் எழுத வேண்டும் என்பதோடு, அந்தத் தமிழ் மக்களின் மனதுக்கும் புரிய வேண்டும் என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

அதனால்தான், அவர் எழுதிய பாடல்கள் பாமரனுக்கும் புரிந்தன; படித்தவனுக்கும் சிந்தனையைத் தந்தன.

இன்றைய கவிஞர்களும் மக்கள் என்ன விரும்புகிறார்களோ அதைத்தான் எழுதுகிறார்கள். குறிப்பாக காதல், காமம் போன்ற விஷயங்களை இன்றைய பாடல்களில் வெளிப்படையாக எழுதுகிறார்கள்.

ஆனால் அப்பா அதையே இலைமறை காயாக, நாகரிகமாகவும் அழகாகவும் சொல்லக்கூடியவர்.

ஒரு பாடலில் வெளிப்படையாகச் சொல்லக்கூடிய விஷயத்தை,

“ வாராயோ தோழி வாராயோ என்ற பாடலில் மலராத பெண்மை மலரும்...”

என்று அவர் எழுதியிருக்கிறார்.

அந்த வரியைப் பார்த்த சென்சார் போர்டு அதிகாரியே, “இவ்வளவு மோசமான வரியை நான் எப்படி அனுமதித்தேன்?” என்று ஆச்சரியப்பட்டதாகச் சொல்வார்கள்.

ஆனால் அந்த வரியில் எதுவும் வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை. சொல்ல வேண்டியதை நேரடியாகச் சொல்லாமல் சொல்லியிருப்பதுதான் அப்பாவின் திறமை.

அவருடைய வார்த்தைகள் அப்படித்தான்.

ஒரு விலைமகள் பாடுவதைப் போன்ற சூழலில் கூட, அவர்,

“விற்ற பொருளையே மீண்டும் விற்போம்
விற்பனை வரி இல்லை...”

என்று எழுதுகிறார்.

அந்த வரியில் ஒரு பெண்ணின் தொழிலையும், அந்தச் சூழலையும் நேரடியாகச் சொல்லாமல், அதற்குள் இருக்கும் பொருளை ரசிகர்கள் புரிந்துகொள்ளும் வகையில் எழுதியிருக்கிறார்.

அதுதான் கண்ணதாசனின் எழுத்து.
வார்த்தைகளில் நாகரிகம்;
கருத்துகளில் ஆழம்;
சொல்லாமல் சொல்லும் நயம்.

அவரிடமிருந்து இன்றைய தலைமுறை கற்றுக்கொள்ள வேண்டியது இதுதான்.

மக்கள் ரசிக்க வேண்டும் என்பதற்காகத் தரத்தை விட்டுக்கொடுக்காமல், மக்களின் மனதுக்குள் செல்லும் மொழியை எப்படி உருவாக்குவது என்பதை கண்ணதாசனிடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

அவர் எழுதிய பாடல்களை மட்டும் கற்றுக்கொள்ள வேண்டியதில்லை;

எப்படிச் சிந்திக்க வேண்டும் என்பதையும் கண்ணதாசனிடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

"எனது தந்தை கண்ணதாசனின் நூற்றாண்டு விழா தொடங்கியிருக்கிறது. கடந்த 25 நாட்களாக மக்கள் குரல் நாளிதழ் வழியாக வாசகர்களுடன் கண்ணதாசனை பற்றிய பல்வேறு அரிய தகவல்களை பகிர்ந்து கொண்டு வந்தேன்; கண்ணதாசன் வாழ்க்கை ஒரு பெருவெள்ளம். அதில் சிறு துளி மட்டுமே வாசகர்களின் வாசிப்புக்கு வந்துள்ளது. மடைத்திறந்தால் காகிதம் பத்தாது. இன்னும் பேசுவோம்... இனியும் பேசுவோம்... கண்ணதாசன் கவிதைகளை....".

(முற்றும்)

ஷீலா பாலச்சந்திரன்

நடுப்பட்டியில் 10 நாள்களாக நடைபெற்ற காத்திருப்பு போராட்டம் வாபஸ்: தவெக ஜெயக்குமார் தலையீட்டால் சுமுகத்தீர்வு



ஈரோடு, அக். 26–

பெருந்துறை வட்டம், நடுப்பட்டியில் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கடந்த 10 நாள்களாக நடத்தி வந்த தொடர் காத்திருப்புப் போராட்டம், தமிழக வெற்றிக் கழகத்தின் ஈரோடு புறநகர் மேற்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினருமான எஸ். ஜெயக்குமார் நடத்திய பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து வாபஸ் பெறப்பட்டது.

திருப்பூர் மாநகராட்சியின் குப்பைக் கழிவுகளை ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட கிராமப் பகுதிகளில் கொட்டக் கூடாது என அதிகாரப்பூர்வமாக உத்தரவு பிறப்பிக்க வேண்டும்; காவுத்தம்பாளையத்தில் அமையவுள்ள துணை மின் நிலையத்தை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும்; அப்பகுதியில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடைபெற்றது.

மேலும், எதிர்காலத்தில் உயர்மின் கோபுரங்கள் அமைப்பதைத் தடுத்து, சாலையோரமாக நிலத்தடிக் கேபிள்கள் மூலம் மின்சாரத்தைக் கொண்டு செல்லும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்; தெருநாய்கள் மற்றும் வெறிநாய்கள் கடித்து உயிரிழக்கும் கால்நடைகளுக்கு விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும்; அத்திக்கடவு–அவிநாசி இரண்டாம் கட்ட நீரேற்றுத் திட்டத்துக்கு நிதி ஒதுக்கி, முதல் கட்டத்தில் விடுபட்ட குளங்களுக்கும் தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

கறிக்கோழிப் பண்ணைத் தொழிலில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, கோழிக்குஞ்சுகளை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் விவசாயிகள் பங்கேற்கும் முத்தரப்புப் பேச்சுவார்த்தைக் குழுவை அரசு அமைக்க வேண்டும் என்றும் போராட்டக் குழுவினர் வலியுறுத்தினர்.

இதையடுத்து, போராட் டக் குழுவினரை நேரில் சந்தித்த எஸ்.ஜெயக்குமார், அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தார். பின்னர், வருவாய்த் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையனைத் தொலை பேசியில் தொடர்புகொண்டு நிலவரத்தை எடுத்துரைத்தார். கோரிக்கைகளை அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்று விரைந்து நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்ததைத் தொடர்ந்து, போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

வரவிருக்கும் பெருந்துறை சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கைகளை அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்று நிறைவேற்ற முயற்சி எடுக்க வேண்டும் என்றும் போராட்டக் குழுவினர் கேட்டுக் கொண்டனர். போராட்டத்தில் தலையிட்டு பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண உதவிய எஸ்.ஜெயக்குமாருக்கு அப்பகுதி மக்கள் மற்றும் விவசாயிகள் நன்றி தெரிவித்தனர்.

பனை மரங்களை வெட்ட கலெக்டர் அனுமதி அவசியம்

நாமக்கல், அக். 26–

தமிழகத்தின் மாநில மரமான பனை மரங்களை வெட்டுவதற்கு மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்று கலெக்டர் மதுபாலன் தெரிவித்துள்ளார்.

நீர்நிலைகளின் காவலன் என்று அழைக்கப்படும் பனை மரங்கள், கைவினைப் பொருள்கள் மற்றும் உணவுப் பொருள்கள் தயாரிக்கப் பயன்படுகின்றன. பல்லுயிர் பாதுகாப்பு, காலநிலை மீள்தன்மை, மண் வளம் மேம்பாடு, நீர் சேமிப்பு ஆகியவற்றுக்கும் உதவுகின்றன. பல குடும்பங்களின் வாழ்வாதாரமாகவும் பனை மரங்கள் உள்ளன. பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க தமிழக அரசு கடந்த மூன்று ஆண்டுகளாகப் பனை மேம்பாட்டு இயக்கத்தைச் செயல்படுத்தி வருகிறது. மேலும், 12.09.2025 முதல் வெளியிடப்பட்ட அரசாணையின்படி, கலெக்டரின் அனுமதியின்றி பனை மரங்களை வெட்டக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சுமார் 150 ஆண்டுகள் ஆயுட்காலம் கொண்ட பனை மரங்கள், செங்கல் சூளைகள் மற்றும் தொழிற்சாலைகளின் பயன்பாட்டுக்காக வெட்டப்படுவதைத் தடுக்கும் வகையில், அரசு வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது. அதன்படி, பனை மரங்களை வெட்டுவதற்கு முதலில் உழவர் செயலியில் விண்ணப்பிக்க வேண்டும். பின்னர், வட்டார மற்றும் மாவட்ட கண்காணிப்புக் குழுக்களின் அனுமதி பெற வேண்டும். வெட்டப்படும் ஒவ்வொரு பனை மரத்துக் கும் ஈடாக 10 பனை மரக்கன்றுகளை நட்டு வளர்க்க வேண்டும். வெட்டப்பட்ட மரங்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு எடுத்துச் செல்லும்போது அனுமதிக் கடிதத்தைக் காண்பிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு, சம்பந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம். அனைத்துப் பாகங்களும் பயன்தரும் கற்பக விருட்சமான பனை மரங்களைப் பாதுகாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கலெக்டர் தெரிவித்துள்ளார்.

படிவம் எண். CAA.2

(நிறுவனங்கள் சட்டம் 2013–ன் 230(3) பிரிவின்படியும் மற்றும் நிறுவனங்கள் (சமரசம், சீரமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு) விதிகள் 2016–ன் விதி 6 மற்றும் 7 ஆகியவற்றின் கீழ்)

தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னை அமர்வு முன்பாக

CA (CAA) NO. 71 / (CHE) / 2026

